தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17-3-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சி 14-03-2015 அன்று பல்கலைக்கழக அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை ஆவுட்ரீச் நிறுவன இயக்குநர் மற்றும் தற்காப்புப் பயிற்சி வல்லுநர் திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் வழங்கினார்.

பள்ளி, கல்லூரி, பணிபுரியும் பெண்களுக்கு சமூக விரோதிகளால் ஏற்படும் பாலியல் தொல்லைகளை, தற்காப்பு உத்திகள் மூலம் தடுக்கலாம். குறிப்பாக கைகளை பயன்படுத்தி தடுக்கும் முறைகள், பள்ளி கல்லூரி மாணவிகள் பயன்படுத்தும் பென்சில், பேனா, சிறு கற்கள், மிளகாய் பொடி போன்றவற்றைக் கொண்டு தடுக்கும் முறைகளை செயல்விளக்கம் செய்து காட்டினார். பெண்கள்பொது வெளிகளில் செயல்படும் போது தன்னம்பிக்கையுடனும், தளராத மன உறுதியுடனும் செயல்பட கற்றுக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொடர்பு அலுவலர்